செய்தி வெளியீடு **நாள் : 03.11.2025**

சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள ஏரி, கால்வாய் மற்றும் சாலை ஓரங்களில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்குவது தொடர்பாக சிஎம்டிஏ அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று (3.11.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து - நடராசன் மாளிகையில் உள்ள சிஎம்டிஏ அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் **சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள ஏரி, கால்வாய் மற்றும் சாலை ஓரங்களில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு மாற்று இடம் வழங்குவது** தொடர்பாக உயர் அலுவலர்களுடன் விரிவான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத்துறை செயலாளர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சிஎம்டிஏ முதன்மைச் செயல் அலுவலர் திரு.சிவஞானம், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி.ந.ப்ரியா, இ.ஆ.ப., கொளத்தூர் காவல் துணை ஆணையர் திரு.பி.குமார், நீர்வள ஆதாரத் துறை தலைமைப் பொறியாளர் திரு.பொதுப்பணி திலகம், சென்னை குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate